# பார்வை

PARVAI



1989
ஐப்பசி
OCTOBER

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


தரம்... மலிவு...

இந்திய இலங்கை சமைய
உணவுப் பொருட்கள்

இந்தி தமிழ் வீடியோ படங்கள்

மலிவாகவும் தரமாகவும்
பெற்றுக்கொள்ள...

மார்ஷே
ராஜ்

Raj Ent. 276-9262

444 Jean Talon W. Montreal
Quebec. H3N 1P9

www.padippakam.com

# தமிழர் ஒளி

## மாத வெளியீடு

[illegible]

PARVA

THAMILAR OLLI ASSOCIATION INC
1226 ST. MARC, SUITE 206
MONTREAL, QUE, H3H 2E7

படிப்பகம்

# பார்வையில்....

இந்தியா -

இந்தியாவுக்கு வெளியே-

இராணுவ யுத்தம் ஒன்றை மிகப் பெரிதாக

செய்து கொண்டு திருப்பயும் தாயகம்

நுழைகிறது.

எந்த நாட்டோடு இந்த யுத்தம்?

எதனோடும் இல்லை.

இலங்கை இராணுவத்திடம்

இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற என

தமிழ் மண்ணில் கால் வைத்து-

அதே மக்களில் 5000 பேர் வரை இறக்க-

சொந்த இராணுவம் 1000 பேர் வரை

மரணம் எய்த-

விடுதலைப் புலிகளில் 500 வீரர் வரை

உயிர் கொடுக்க-

ஏராளமான ஏழைகளின் குடிசைகள்-

வீடுகள்- கடைகள் கன்னிகள்

www.padippakam.com

தீயோடு சங்கமமாக—

ஏராளமான நினைவுச் சின்னங்களை

எழுப்பி விட்டு இந்தியா நகருகிறது.

இது ஏன் நடந்தது?

எனக்கு அரசியல் வயது நாற்பது. இந்தக்

கற்றுக்குட்டி ராஜீவுக்கு வயது நாற்பது

என தனக்கு விலாசம் சொன்ன

ராஜதந்திரி ஜெ.ஆரின் வலையில்

சிக்கிய ராஜீவும்—

ராஜீவின் வலையில் சிக்கிய

தமிழ் இயக்கங்களும் விடுதலைப்புலிகளை

இல்லாமல் செய்ய முனைந்ததின்

விளைவு—

துப்பாக்கிச் சதுராட்டத்தில் மக்கள்

மாணவர்— கல்விமான்கள்— சோழப் புழுதியாக

அள்ளப்பட்டு விட்டார்கள்—

சங்கிலி மன்னன் கால்தெறிக்க ஓடிய

காலம் முதல் இன்று வரை

சரித்திரத்தை ஒரு முறை திருப்புங்கள்—

பார்வையில்..

படிப்பகம்

www.padippakam.com

# பார்வையின் பார்வையில்......

நாம் எப்பொழுதும் இரண்டு

இந்த நூற்றாண்டில் ஆவது

ஆயுதம் கையில் இருக்கும் பொழுதாவது

நாம் ஒன்றுகூடல் என்ன?

அல்லது...

ஒருவரை விட்டு ஒருவர் விலகுதல்

என்ன?

இரண்டுமே வீரத்தின் விளைவுகள் தான்—

இல்லையேல் தமிழ் இனம் இலங்கையில்

இருந்ததை தொல் பொருள் ஆராய்ச்சி

ஒரு நாள் தோண்டும்.

---

பார்வை எதிர்பார்க்கிறது.

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்களையும், படைப்பாளிகளிடம் இருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, இலக்கிய, அரசியல், ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி.

பார்வை,

L'ASSOCIATION "THAMILAR OLLI"
"THAMILAR OLLI" ASSOCIATION
1225 ST. MARC, SUITE 206
MONTREAL, P.Q., CANADA H3H 2E7
TEL.: (514) 932-9893

படிப்பகம்

www.padippakam.com


# MARCHE VICTORIA ORIENTAL INC.

**TWO LOCATIONS**

MONTREAL
6324 VICTORIA STREET
PLAMONDON
TEL.: (514) 737-4715
OPEN 7 DAYS

WEST ISLAND
4759 BLVD DES SOURCES
PIERREFONDS,
TEL.: (514) 685-3260
OPEN 6 DAYS (MONDAY CLOSED)
FREE PARKING



| | |
|---|---|
| 20 Kg கோதுமை மா (Five Rose)........................ | 13.49 |
| தாவர எண்ணெய் (மரீனா பெரியது) .................. | 15.49 |
| மல்லித்தூள் 1K.g.................................................. | 3.49 |
| கொர்லிக்ஸ் ............................................................ | 2.99 |
| புழுங்கல் அரிசி 10 K.g...................................... | 6.99 |
| புளியம் பழம் ........................................................ | .99 |
| மிளகாய்த் தூள் 1K.g........................................... | 4.49 |
| சானாப் பருப்பு (Chana Dal).................................. | 2.89 |
| மைசூர் பருப்பு 2 K.g........................................... | 2.99 |

அத்தோடு இந்திய இலங்கை காய்கறி வகைகள் பழவகைகள் மிக மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். தமிழ் வீடியோப் படங்கள் 49 சதம் மட்டுமே. (24 மணித்தியாலம் மட்டும்)





# மாசே விக்டோரியா

**MARCHE VICTORIA ORIENTAL INC.**

© 1989 RP




படிப்பகம்


## இறைச்சிப் பிரியர்களுக்கோர் நற்செய்தி

# கொலோசொஸ்
# KOLOSSOS
Meat Market

1195 Boul St. Laurent Blbd
Montreal, Que. • H2X 2S6

- சென் லோறன்ற் மெற்றோவுக்கு அருகாமையில்...
- உங்களுக்கு தேவையான புத்தம் புதிய இறைச்சி வகைகள்...
- ஆடு, மாடு, கோழி, முயல், தாரா, காடை, பன்றி மற்றும் அனைத்து வகைகளும்...
- நீங்கள் விரும்பிய அளவுகளில் வெட்டித் தருகிறார்கள்.
- அதிக அளவில் எனில் மொத்த விற்பனை விலையில்....
- $100 க்கு மேற்படின் இலவச விநியோகம் இன்றே நாடுங்கள்.

## KOLOSSOS





Tel: 861-6606
861-2238

www.padippakam.com

# செய்திக் கோவை...

## தேடல்

தருவது: சிவன்.

" கனடா, கலை இலக்கிய மன்றத்தின் புதிய வெளியீடு. 'தேடல்' ரொறொன்ரோ நகரை மையமாகவைத்து இயங்கும் இக் கலைமன்றத்தின் இலக்கிய வெளியீடாக 'தேடல்' செப்ரெம்பர் மாதம் தனது புதிய பயணத்தை தொடங்கியது.

" சஞ்சிகை ஒன்று வெளியிடுகிறோம் என்ற திருப்திக்காக அல்ல இது. உலகம் எல்லாம் அள்ளித் தெளித்த நெல் மணிக் கதிர்களென பரந்து இருக்கும் ஈழத்து தமிழ் இனத்தை இத் தேடல் மூலம் இணைகிறோம். மாண்டும் வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளவர்கள் இணையும் உதவைக்குரிய பயணமாக இது இருக்கும்" என்ற எழுச்சிப் பிரவாகத்தோடு அடக்கமாக, இலக்கியமாக ஆர்ப்பாட்டமற்ற அழகாக தமிழர் கரங்களில் மிளிர்கிறது தேடல். -நம் பத்திரிகை தந்த நிறைவை தேடல் தருகிறது. கவிஞர் செழியனின் மனதைக் கவர்ந்த இருவரிகள்.

எஞ்சி இருப்பது கரித்துண்டே ஆயினும்....
எழுதியே முடிப்பர்....

கனடாவில் 'தேடல்' ஒரு சாதனை.



படிப்பகம்

www.padippakam.com

THE FIRST TAMIL NEWSPAPER FROM QUEBEC

# நாயகன்

கியூபெக்கிலிருந்து வெளியாகும் முதல் தமிழ்ப் பத்திரிகை

AUGUST-SEPTEMBER
Vol:1 No:1

NAYAKAN

கனடா, கியூபெக் மாநிலத்தில் இருந்து ஒரு தமிழ்ப் பத்திரிகை புதுயுகம் ஆரம்பிக்கிறது. நாயகன் என்னும் பெயரில் வெளிவந்திருக்கும் இப்பத்திரிகை கியூபெக் மாநிலத்தில் இருந்து வெளிவரும் முதல் தமிழ் பத்திரிகை ஆகும். திரு. நாராயணமூர்த்தியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இப் பத்திரிகையின் உதவி ஆசிரியர்களாக சுதா குமாரசாமியும், அனந்தப் பிரசாத்தும் இருக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே கவர்ச்சியும் கனமும் கொண்டு நாயகன் வந்திருப்பது பெருமை படக் கூடியது ஆகும். பழுத்த அனுபவம் பளிச்சிடுகிறது.

நாயகன், தேடல் இரண்டிற்கும் எம் நல் வாழ்த்துக்கள்.

# தூள்... தூள்....

• தூள். என்று பெருமைபடக்கூறும் போதை வஸ்து பற்றிக் கேள்விப் பட்டு இருக்கிறோம். உலகமெங்கும் இரும்பு வலைகள் என இருக்கும் காவல்களையும் மீறி தூள் வியாபாரம் தூள் கிளப்புகிறது. அதில் தமிழர்களும் தாங்களும் இருக்கிறார்கள் என அடிக்கடி நிரூபிக்கிறார்கள்.

ஆனால் கனடா ரொறன்ரோ நகரில் சிறையில் இருக்கும் தூள் கடத்தல் சந்தேக நபர் ஒருவரை (தமிழ் வாலிபர்)



படிப்பகம

கடத்தத் திட்டமிட்ட 5 தமிழ் வாலிபரும் இரு கனேடியரும் 7 1/2 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஹெரோயினோடு பிடிபட்டதோடு, சிறை உடைக்கும் திட்டமும் அம்பலமானது. இச் செய்தியை ரொறொன்ரோ ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிட்டன.

# இலங்கை உடன் (படும்) பாடு

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வருகிற டிசம்பர் 31ம் திகதி முற்றாக வெளியேறுவதென இந்தியாவும் இலங்கையும் உடன்படிக்கை செய்துள்ளன. இந்தியா உடனடிப் போர்நிறுத்தத்தை கொண்டு வந்தது. விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆயினும் சண்டை தொடர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக தெரியவருகிறது.

தமிழ் மண்ணையும் – மக்களையும் மாகாண அரசையும் காப்பாற்ற கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட வாலிபர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாக வரதராஜப் பெருமாள் அறிவித்துள்ளார்.

கொலைகள் படு வேகமாக நடத்தி வரும் J.V.P யோடு இலங்கை அரசு உடனடிப் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

# WELCOME TO CANADA.

திரைப்பட இயக்குனர் ஜோன் சிமித் அவர்களால் தமிழ் கப்பல் அகதிகள் கதை படமாக்கப்பட்டு 29.8.89 செவ்வாய்க் கிழமை அன்று மொன்றியால் சர்வதேச திரைப்பட விழாவில் அரங்கு நிறைந்த காட்சியாக ஓடியது. இந்திய சமாதானப் படையின் யாழ் ஆஸ்பத்திரிக் கொலைகளையும் விடுதலைப் புலிகளின் இந்திய அமைதிப் படைக்கு எதிரான போராட்டத்தை நியாயப் படுத்தியும் கதாபாத்திரங்கள் பேசுவது படத்தில் இருந்தது தணிக்கையோ நாடுகளின் எதிர்ப்போ இன்றி ஓடியது. இயக்குனர் ஜோன் சிமித் தமிழர்களின் நன்றிக்குரியவர்.

www.padippakam.com

# பௌரசாவுக்கு வாழ்த்துக்கள்

கனடா, கியூபெக் மாநில அரசுத் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி 92 ஸ்தானங்களைப் பெற்று மீண்டும் அரசுகட்டிலில் ஏறியுள்ளது. பௌரசா (BOURASSA) திரும்பவும் பிரதமராகியுள்ளார். 'பார்டி கியூபெக்குவா' எதிர்க்கட்சியாகவும் 40% வாக்குகளையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. தனக்கு விழும் ஒவ்வொரு வாக்கும் கனடாவில் இருந்து கியூபெக் பிரிவதை ஆதரிக்கும் வாக்குகளாகும் என P.Q. அறிவித்திருந்தது. தொழில் நகரான மொன்றியலில் நான்கு ஈக்குவாலிற்றி (EQUALITY) அணியினருக்கு வெற்றி கிடைத்துள்ளது. பிரதமராகியுள்ள பௌரசாவுக்கு எம் நல்வாழ்த்துக்கள்.

| LIBERALS: | P. QUEBECOIS: | EQUALITY: |
|---|---|---|
| 92 | 29 | 4 |

www.padippakam.com

திசையில் கருத்து.......

# இந்தியப்படை விலகலை சோவியத் விரும்புகிறது

இலங்கையிலிருந்து இந்தியப்படை விலக்கப்பட வேண்டும் என்று சோவியத் வறபுறுத்துகிறது. படைவிலகல்பறறி மென்மையான வார்த்தைகளைத்தான சோவியத் பிரயோகித்துள்ள போதிலும் ராஜதந்திரப் பரிபாஷையின்படி அது உண்மையில ஒரு வறபுறுத்தலே. இந்தியாவின மிக நெருங்கிய நட்பு நாடாகிய சோவியத்தின் இத்தகைய போக்கு அரசியல் அரங்கில் பல புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

தனது நட்பு நாட்டின் இத்தகைய போக்குக் காரணமாக தனது நடைமுறையில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப் பட்டுள்ளது. சோவியத்தின் இத்தகைய போக்கு ஆச்சரியத்தை ஏற்படுததக் கூடியதல்ல; மாறுகப் புரிந்து கொள்ளப்படக் கூடியதே.

கெடுபிடி யுத்த (Cold war) சர்வதேச நிலை (International Order) தற்போது மாறியுள்ளது. அமெரிக்காவுடனுன இந்த கெடுபிடியுத்தத்திற்கு முகம் கொடுக்க சோவியத்திற்கு இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டின் அனுசரணை அவசியப்பட்டது. அதனுல தனது விருப்பங்களை மீறியும் இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் சோவியத்திற்கு இருந்தது.

ஆனுல கெடுபிடியுத்த சர்வதேச நிலையை இன்று சோவியத் உடைத்து விட்டது. மேலும் ஆப்கானில் தனது படையை வைத்திருந்தபோது இந்தியாவின் ஆதரவு தேவைப் பட்ட நிலை தற்போது சோவியத்திற்கு இல்லை. ஆதலினுல் நீண்டகால நோக்கில் இந்தியாவினுல் வரக்கூடிய ஆபத்து என்ற நோக்குக்கு சோவியத் தற்போது முன்னுரிமை கொடுக்க விரும்புகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா பலம்பொருந்திய நாடென்ற வகையில் விஞல் சோவியத் இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசுக்குச் சற்று சாதகமாக நடக்க விரும்புகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியப்படை விலக்கப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கும் சோவியத் வெளிவிவகார கொள்கை வகுப்பிற்கான தென்னாசியக் குழுத் தலைவர், உபதலைவர் போன்றோரின் கருத்துக்களையும், இலங்கையின் கோரிக்கைக்கு இந்தியா சிறிது இறங்கி வரும் போக்கையும் பரிசீலிக்கும் அரசியல் அவதானிகள் இலங்கை உறுதிப்படுத்துவதாய்க் கருதுகின்றனர். அந்நாடு இலங்கையினதும் இந்தியாவினதும் உள்நாட்டு நெருக்கடியின் இரு அரசுகளையும் [illegible] செய்துள்ளது. இருப்பினும் சோவியத் - இந்தியாவுக்கிடையில் எழுந்துள்ள இந்தப் போட்டி ஈழத் தமிழ் பேசும் இனத்தின் நலன்களை அள்ளிக்கொண்டு போகாது பார்த்துக் கொள்ளுதலே முக்கிய அம்சம் என்றும் கூறப்படுகிறது.

# இந்தியாவுக்குத் தோல்வியா?

இலங்கை விவகாரம் சம்பந்தமாக இந்தியா கடைப்பிடித்து வந்துள்ள போக்கு இந்தியாவுக்கு தோல்வியைக் கொண்டு வந்திருப்பதாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது.

இந்தியப் பத்திரிகைகள், வெளிநாட்டுப் பத்திரிகைகள் இதையிட்டுத் தெரிவித்துள்ள கண்டனங்கள், இந்திய எதிர்க்கட்சிகள் காட்டும் எதிர்ப்பு, இந்தியாவின் அயல்நாடுகளும் ஏனையநாடுகளும் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கும் அதிருப்தி, குறிப்பாக அண்மையில் ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்த்தியா' இது பற்றிக் கூறுகையில் "பெரியநாடு சிறிய நாட்டின்மேல் தன் ஆதிக்கத்தைத் திணிக்கிறது". என்ற கருத்துப்பட எழுதியிருப்பது, இந்திய கொள்கை நிர்ணயிப்பாளர்களுக்கு அதிர்ச்சியையே கொடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் இந்திய எதிர்க்கட்சியினர், அமைதிப்படைக்கு ஏற்பட்டுள்ள களங்கம் இந்தியாவின் கொள்கையைத் தீர்மானித்தவர்களாலேயே ஏற்பட்டுள்ளதென்றும், கடந்த வருடம் டிசம்பரில் எல்.ரி.ரி.ஈ. யினர் இந்திய அரசோடு பேச்சுவார்த்தைக்கு உடன்பட்ட போது அதைப் பயன்படுத்தாமல் விட்டதற்கும் இவர்களே பொறுப்பாளிகள் என்றும் பேசியுள்ளதாக, ஒரு பத்திரிகை தெரிவித்துள்ளது.

# அரசியல் அவதானிகள் கருத்து!



படிப்பகம்

www.padippakam.com

ராஜீவ் ஜே. ஆர்.

# இரகசிய ஒப்பந்தம் ஏன்?

எழுதப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தாது காலதாமதப்படுத்தி, தனது சாமர்த்தியத்தால் இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தத்தை உருவாக்கிய ஜே. ஆர்., யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் டெல்லிக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போது 1987 நொவம்பர் 7ஆம் திகதி அங்கு ஓர் இரகசிய ஒப்பந்தத்தை ராஜீவுடன் செய்துகொண்டார்.

அண்மையில் பேச்சுவார்த்தை நடாத்த டெல்லிக்கு சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவிடம், டெல்லி அரசு இந்த இரகசிய ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறியபோது, அந்த இரகசிய ஒப்பந்தத்திற்குத் தாம் மதிப்பளிக்கப் போவதில்லை என்று ரஞ்சன் விஜயரத்தின உறுதியாகக் கூறிவிட்டார்.

இந்தியாவிற்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த, இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர்களுள் ஒருவரான பெர்ணாண்டஸ் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளை, இவ்விரகசிய ஒப்பந்தத்தின் குறுக்கீட்டால், அம்முயற்சி தோல்வியில் முடிந்ததாகவும் தெரிகிறது.

இந்நிலையில் ஜே. ஆர். ஏன் இந்த இரகசிய ஒப்பந்தத்தை மேற்கொண்டார் என்ற கேள்வி எழுகிறது.

இந்த ஒப்பந்தத்தைச் செய்து டெல்லியைத் திருப்திப் படுத்தி, தன்னில் நம்பிக்கை கொள்ளச் செய்வதன் மூலம் ஜே. ஆர்., இந்திய அரசு விடுதலைப் புலிகளோடு சமாதானம் செய்து கொள்வதைத் தடுக்கவும், அவர்களுக்கிடை

www.padippakam.com

யில் மோதலை நீளவைத்து இலங்கை இனப்பிரச்சினையைக் கடத்தவும் திட்டமிட்டார்.

இந்த ரகசிய ஒப்பந்தத்தில், மாகாணசபையின் உறுப்பினர் தொகை, மாகாண அமைச்சர்களின் தொகை, ஆளுநரின் அதிகாரங்கள், அதிகாரப் பரவலாக்கத்தை நாடாளுமன்றம் கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரம், வட-கிழக்கு எல்லைகள்' குடியேற்றம் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதில் முக்கியமானதொன்றாகிய அதிகாரப் பரவலாக்கத்தையே இன்று இந்திய அரசு, படை விலகலுக்குத் தடையாக முன்வைககிறது.

**அட்டையில்.....**

பல விருதுகளைப் பெற்ற 'தாசி' படத்தில் இருந்து ஒரு காட்சி.

நடிகை: சிறந்த நடிகையாக தெரிவான அர்ச்சனா.



## கனவுகளில் மாத்திரம்...

எல்லோரும் - மருத்துவர்
அப்புறம் யார்
நோயாளி?

எல்லோரும் - வழக்கறிஞர்
அப்புறம் யார்
வழக்காளி?

எல்லோரும் - பொறியாளர்
அப்புறம் யார்
தொழிலாளி?

இந்த
மலையேறும் பயிற்சியில்
தோற்றுப் போன
இளைஞர் முகங்களில்
சுதந்திரமான
தாடிக்காடு

வேலைவாய்ப்பு
நிறுவனத்தில்
'ஆயுள் சந்தா உறுப்பினர்'
ஆவதைக் கொண்டாடும்
கஞ்சாக் கனவுகளில்—

காரும் வீடும்
கைகட்டிய சேவகரும்
கனிவான மனையாளும்
கண்ணான பிள்ளைகளும்

ஆம்...
கனவுகளில்
மாத்திரம்தான்!

— ரோஹிணி

www.padippakam.com

# நவரசம் சிந்தும் பாடல்களை

# இசைத்த ஏ. எம். ராஜா!

தமிழ் திரையுலகில் சுமார் கால்நூற்றாண்டுக் காலமாக தனது இனிய இசையால் புகழ் பரப்பிய ஏ. எம். ராஜா விபத்தில் மரணமானார் என்ற செய்தி அவரது அபிமானிகளை அதிர வைத்தது.

இசைக்குயில் ஜோடியான ராஜா — ஜிக்கி தமிழ் திரையுலகில் பாடல்களுக்காகவே திரைப் படங்களை நாடச் செய்தவர்கள்.

"சிற்பி செதுக்காத பொற் சிலையே" என்ற ராஜாவின் இனிய குரலில் "எதிர்பாராதது" திரைப்படப் பாடல் இன்றும் கேட்போரை மயங்க வைக்கும்.

காலஞ்சென்ற எம். ஜி. இராமச்சந்திரன் மற்றும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காதல் மன்னன் ஜெமினி கணேசன் ஆகியோரின் நடிப்புக்கு மெருகூட்டியத் ராஜாவின் இசை என்றும் மிகையில்லை.

தமிழ், தெலுங்கு, இந்தி, சிங்களம் எனப் பல மொழிகளில் பாடிய ராஜா சிங்கள மொழியில் தயாரான ஆரம்ப காலப் படங்கள் பலவற்றில் பின்னணி பாடியிருக்கிறார்.

இந்தியிலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட ராஜ்கபூரின் "அவன்" திரைப் படத்தில் ராஜாவின் பாடல்கள் அப்படம் வெற்றி பெற வழி சமைத்தது.

"கல்யாண பரிசு" என்ற ஸ்ரீதரின் படத்துக்கு ராஜா இசையமைத்து பாடல்களைப் பாடி அப்படம் வெற்றிப்படமாக அமைவதில் பங்கேற்றார்.

தனது மனைவியான பி. ஜி. கிருஷ்ணவேணி என்ற ஜிக்கியுடன் மட்டுமல்லாது, பி. சுசீலா, ஜானகி போன்ற பழைய பின்னணிப் பாடகிகளுடனும் சேர்ந்து ராஜா குரல் கொடுத்துள்ளார்.

குரலினிமை, குரல்வளம் கொண்ட ராஜா எம். ஜி. இராமச்சந்திரனின் "குமாரி", "நாம்" போன்ற பல படங்களுக்கும் குரல் கொடுத்துள்ளார். இதேபோல சிவாஜி கணேசனுக்கும் ஆரம்பகால படங்களில் அவர் குரல் கொடுத்துள்ளார்.

"சிற்பி செதுக்காத பொற்சிலையே", "மின்னல் குலாவும்", "சம்சாரம்", "அன்பே நீ அங்கே" போன்ற பல நூறு பாடல்கள் அவர் குரலினிமைக்கு சான்று பகரும்.

பிற்காலத்தில் புதிய பின்னணிப் பாடகர்கள் வளர்ச்சியால் இந்தக் குரலினிமை மிக்க "ராஜா" திரைப்படத் தயாரிப்பாளர்களால் ஒதுக்கப்பட்டார்.

ராஜா திரைப்பட உலகில் காலடி எடுத்து வைத்த காலத்தில் பாமர மக்கள் ஜனரஞ்சகமான பாடல்களை கேட்டு ரசிக்கும் வகையிலான குரல்வளம் கொண்ட தமிழகப் பாடகர் அவர் ஒருவர் தான் இருந்தார்.

**பாலவி**



படிப்பகம்

www.padippakam.com

# புவிநிலைத்திடப் வேண்டும்...!

காலையும் மாலையும் காரிருள் வேளையும்
காலம் முழுவதும் வேலை - பயன்
கண்டறியாததொரு வேலை!
சோலி சிரட்டில் நிதமும் மனிதர்கள்
சோர்ந்து தளர்ந்திடும் வாழ்வு - துயர்
சூழ்ந்து வளர்ந்திடும் வாழ்வு!

வஞ்சகம் சூது களவு நிறைந்தவர்
தஞ்சம் பெருகிவிடுதே - அவர்க்
கஞ்சி மறையுது நீதி!
பஞ்சக் கொடுமைகள் சாதிகள் சண்டைகள்
நெஞ்சம் வெடிக்குதையயோ - புவி
நின்று நிலைப்பது மெய்யோ!


படிப்பகம்

www.padippakam.com

போலி உலகில் கிடந்து தவித்தது
போதும் அட இனிப் போதும்
பொய்யிற் புரண்டது போதும்!
கோலி மெலிந்து வளைந்தது நல்லுடல்
கொண்ட கவலையதாலே
ஒன்றும் பயனில்லை மேலே!


வாழத் தெரிந்தது போதுமிவ் வையக
வாழ்வை யுணர்ந்திடல் வேண்டும் - அதன்
மாண்பை உணர்ந்திடல் வேண்டும்!
தேடித் திரிந்து சிறந்த அமைதியை
நாடி அணைத்திடல் வேண்டும். - மனம்
ஆடிக் களித்திடல் வேண்டும்!

ஓடித் திரிந்துலகத்தின் இயற்கையில்
ஊறித் திளைத்திடல் வேண்டும் - துயர்
ஓடிப் பறந்திடல் வேண்டும்
பாடிப் பறந்து சுதந்திரப்
பாவலனாகிடல் வேண்டும் - புவி
பாவித்து நான் வரல் வேண்டும்!

— கவிஞர் கந்தவனம் —


படிப்பகம்

www.padippakam.com



இது சீனக் கலை பிரதிபலிக்கும் கட்டிடம் அல்ல.
கோதுமைமா, சீனி, முட்டை ஆகியவற்றைக் கொண்டு
ஆக்கப்பட்ட உணவுக் கோபுரம். ஜகார்த்தாவில்
நடந்த கண்காட்சியில் அமைக்கப்பட்டது.
கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டது.
உயரம். 44 மீற்றர்.


படிப்பகம்

www.padippakam.com

இதோ ஒரு புதியதோர் அறிவிப்பு

முற்றிலும் புதிய நிர்வாகத்தின் கீழ்

# U CAN BUY


- இந்திய, இலங்கை, கனடிய உணவுப் பொருட்கள்.....
- உணவுப் பொருட்கள்.....புதிய இறைச்சிவகைகள்.....
- பலசரக்கு வகைகள்
- காய்கறி வகைகள்......
- இன்னும் உங்களுக்குத் தேவையான
- அன்றாட பாவனைப் பொருட்கள்....



பெற்றுக் கொள்ள சிறந்த இடம்......

# யூ கான் வை

# U CAN BUY



5692 VICTORIA AVE.

தொலைபேசி 345-8622

உங்கள் தளபாடங்களை ஏற்றி இறக்கத்
திருப்திகரமான முறையில் எங்கள் வாகன சேவை
இன்றே நாடுங்கள்

© 1989 AP

www.padippakam.com

# கறையானும்... கடவுளும்..!

கறையான்: என் தவம் இரங்கி
வந்தனை இறைவா
இன்றொரு வரம் நீ
எனக்கருள வேண்டும்!

கடவுள்: பிரச்சினை எதுவோ?
பின்னாய் விடு கவலை
கரைச்சலை சொல்லு
கவலைகள் தீரும்!

கறையான்: மனிதனின் தொல்லை
இனியினிப் பொறுக்கேன்
மனிதனைக் கடிக்க - அவன்
மரிக்க நீ வரம் தா!

கடவுள்: கடிக்கவும் சாகவும்
கறையான் நீ கேட்டனை
நீயே கடிக்க....
நீயே சாவாய்...!

www.padippakam.com

# இந்தியாவும்... தமிழனும்...!

தமிழன் : இந்தியா.... இந்தியா....
எங்களைக் காப்பாய்...
இலங்கை இராணுவம்
கொல்கிறது அந்தோ!

இந்தியா : பிரச்சினை தீரணும்...
பிரச்சினை தீரணும்....
அவ்வளவு தானே...
அடியேன் வந்தேன்!

தமிழன்: சாதலும் மோதலும்
நிற்கணும் வேந்தே!
ஈதெம் வேண்டுகோள்
எங்களைக் காப்பாய்!

இந்தியா: ஆயுதமெடுத் தவன்
அனைவரும் சாக....
வழியே ஆகுக....
வழிவிடு பிள்ளாய்!

— தமிழ்ப்பிரியா —

www.padippakam.com

சிறுகதை

# நீல் எரியும் நெருப்புகள்

அடர்ந்து படர்ந்து வியாபித்திருக்கும் அந்த ஆலமரம் இருக்கும் இடம் தான் அலாதியானது. என் கிராமத்தை வளம்படுத்தும் குளம் கிழக்கு மேற்காக நீண்டு கிடக்கிறது. வடக்கு தெற்காக கிராமத்தை ஊடறுத்து நேர்கோடு அடித்ததுபோல் செல்லும் அந்தத் தெரு குளத்தின் மேலாக ஏறி தன்பாதையை தொடர்கிறது. கிராமத்தின் அழகு இங்கேதான் எழுதிக் கிடக்கிறது.

அம் தெருவும் குளமும் சந்திக்கும் அந்த மூலையில், தென்கரையில் அந்த ஆலமரம் நிலப்பரப்பில் அரைவாசியும் குளப்பரப்பில் அரை வாசியுமாக ஆலமரத்து நிழலின் பெரும்பகுதி தெருவில் விழுகிறது.

மாரிகாலத்தில் வயல் வெளி நீரில் பிரவா கித்து ஓடும் வெள்ளம் பாலத்தின் நடுவே சீறி ஓடும் சல- சலப்பு பாலத்தின் மேலே நின்று தூண்டிலின் மீன் பிடித்து விளையாடும் சிறுவர்கள் எல்லாமே ஆலமர அடி நிழலின் இருந்து ஒப்பு பெறும் எனக்கு கவிதை தரும் நிகழ்வுகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

அன்றும் வழமையான என் இருக்கையில் நான். பங்குனி வெய்யிலின் புழுக்கம் இன்றி வெளிரூட்டப்பட்ட ஆலமர நிழலில் அமர்ந்து தென்புறமாக பார்த்த வண்ணம் இருக்கிறேன்.

அதோ அவர் வந்து கொண்டு இருக்கிறார். கண்ணுக்கு எட்டிய தூரம் என்பார்களே அதற்கும் அப்பால் வந்து கொண்டிருக்கிறார். என்றாலும் அவரை அடையாளம் காண கன நேரம் செல்லாது. அவர்தான் முத்தையாப்பா.

வெள்ளை வேட்டியும் தோளில் சால்வையும் ஆலமர நிழல்போல் தலைக்குமேல் வியாபித்திருக்கும் குடையும், வயதின் முதிர்வைத் தூக்கி எறிந்து கம்பீரமாக நடக்கும் நடையும் தெரிந்து விட்டால் கண்டிப்பாக அவர் முத்தையாப்பா தான்.

புகைமூட்டம் போல் ஒரு வடிவம் வெகுதொலைவுக்கு அப்பால் தென்பட்டாலும் அது முத்தையாப்பாதான் என கண்டு கொள்ள எம் கிராமத்து மக்களுக்கு கன நேரம் செல்லாது.

ஏன்? ஒரு தலைமுறையைக் கடந்து நிற்கிறார். கல்யாண வீடு, செத்தவீடு, கோவில்திருவிழா இப்படி எல்லா நிகழ்வுகளிலும் இவர் கதாநாயகன். முந்திய தலைமுறையில் குடுமி இருந்ததை இன்றைய தலைமுறைக்கு ஆதாரம் காட்டும் மனிதர். ஒரு முழக் குடுமியை இழுத்து முடிந்தாரானால் அது ஒரு அழகாகத்தான் இருக்கும். பாடசாலைக்கு சென்று அறியாத ஒரு காலத்தில் அவர் இளமை கழிந்தது எனினும் எல்லாக் காப்பியங்கள், தேவார திருவாசகங்கள் அனைத்தும் அத்துப்படி, நாட்டு நடப்பு, அரசியல் சமய சகல விஷயங்களும் அலசும் எங்களூர்ப் பெரியவர் முத்தையாப்பா என்னை அணுகிவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

எட தம்பி சிவமே..... நீ இங்கை...
இருப்பாய் எனக்குத் தெரியும். எனக்கு வீட்டில இருக்க மனமில்லை.....மனத்திலை ஒரு அமைதியுமில்லை....
வெளியே வெளிக்கிட்டு நடந்தால் ஒரு சிறு ஆறுதல் கிடைக்கும் என நினைத்து வாறன்.

"என் ..அப்பா...என்ன நடந்தது?...
முத்தையாப்பா என எல்லோரும் நேரில் கதைக்கும் பொழுது முத்தையா போய்விடும். எல்லோருக்கும் அவர்அப்பா தான். மீண்டும் என் கேள்வி தொடர்கிறது.

"நீங்கள் தான் நிதானம் இழக்காதவராச்சே...
உங்கள் முகத்தில் வாட்டம் தெரிகிறது...ஏதோ காரணம் இருக்கவேணும்...." என்றேன்.

" சிவம் "....

ஏதோ இறுக்கமான வேதனை ஒன்று விழப்போகிறது என்பதை என்னை அழைத்த விதமும் அவரது பார்வையும் கூறியது. சுருங்கிய குடையை அருகில் நீட்டுப்போராக வைத்து என் முன்னால் அமர்ந்து கொண்டார்.

" உங்கள் மனதை ஏதோ வெகுவாகப் பாதித்து இருக்கிறது. என்னவாக இருக்கும் என்பதை அறிய என் மனமும் தவிக்கிறது. சொல்லுங்க அப்பா....," என்றேன்.
அந்த இறுக்கமான இதயத்தின் கதவுகள் திறக்க ஆரம்பித்தன.

" டே தம்பி.... எனக்கென்னடா....என் பிள்ளைகள் எல்லாம் நல்லாக இருக்கிறார்கள். பேரப்பிள்ளைகள் கல்யாணங்களும்



படிப்பகம்

www.padippakam.com

கண்டு விட்டன். பூட்டப்பிள்ளைகளும் காணப்போறன்... குடும்ப வாழ்வின் நிறைவுகள் எனக்குப் போதும் மகனே...என்னை வாட்டுவது இது அல்ல......

" எனக்குத் தெரியும்...நீங்கள் வாழ்வின் முதிர்ச்சியில் வளம்கண்டு நிற்கிறவர்...குடும்பத்துப் பிரச்சனைகள் எதுவும் உங்களுக்கில்லை என்பதும் புரியும்..உங்கள் இதயத்து அடித்தளத்து உணர்வில் ஏதோ ஆதங்கம் இருப்பது எனக்குத் தெரிகிறது..... சொல்லுங்கள் அப்பா என்றேன்.

படாரென பட்டுத் தெறித்தது அவரது வார்த்தைகள் " நான் சாகிறதுக்கு இடையில் தமிழ் ஈழம் கிடைக்காதா மகனே.....?

சமுத்திரத்து வெள்ளத்திலும் நெருப்புப் பிடித்து விட்டது. என்தேகம் புல்லரித்தது. ஆசை, வேட்கை, அவா, துடிப்பு இன்னும் எதனையோ எல்லாம் சுமந்து வார்த்தையாக வெளியே பறந்த இதயத்துத் தீ முத்தையாப்பாவுக்கு புது வடிவம் தந்தது. அவர் நெஞ்சத்து வேள்வி " தமிழ் ஈழம் " என விளைவதைக் கண்டேன்.

" நிட்சயம் கிடைக்கும்...." இது நம்பிக்கை வாசகமாக மட்டும் அல்ல தீராத வேட்கையோடு வாசம் செய்யும் அந்த வயோதிப வாலிபனின் வாழ்நாளுக்கு எல்லை வைக்க விரும்பாமல் நீடூழி வாழ்க எனும் வாழ்த்துதலாகவும் என்னில் இருந்து வெளிவந்தது.



படிப்பகம்

" ஆனல் ...ஒன்று...தம்பி..."

என்னது...?

" நீ சொல்லுற மாதிரி அந்த நம்பிக்கை நெஞ்சில் கிடக்குதடா. ஆனல் ஒருவரை ஒருவர் அடிபட்டு...அடிபட்டு...எதற்காக ஆயுதமெடுத்தோம் என்பதை மறந்து... இப்படியே மடிந்து கொண்டு இருந்தால்....அதை நினைக்க மனம் அலையாய்கிறது. ...."

" விடுதலைக்காகப் போராடும் எல்லா இனங்களிலும் இப்படி ஆறேழு பிரிவுகள் இருப்பதை வரலாறு காட்டுகிறது பாலஸ்தீனத்தில் இருந்து இதை உணரலாம்"......

" அது சரி தம்பி...தன் இனத்துக்கு எதிராக துப்பாக்கியை நீட்டிய சரித்திரம் எங்களுக்குத்தானே இருக்குதடா.

முத்தையாப்பாவின் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அல்லது எதிர்கொள்ள என்னிடம் வார்த்தைகள் இல்லை. ஆம் எனத்தலையாட்டி நின்றேன்.

யாழ் நகரில் இருந்து வரும் வடக்கு ரூட் "பாஸ் " சில் இருந்து மாணவர்கள் வழமைக்கு மாறுக போன கையோடு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். பற்றி எரிந்து கொண்டிருந்த முத்தையாப்பாவின் இதயத்தை தணிக்கும் ஆற்றல் என்னிடம் இல்லாது போன சமயம் பள்ளிப்பிள்ளைகள் எமது கவனத்தை திருப்பினர்கள்.

ஏதோ யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்தது. என்னவாக இருக்கும் என்பதை அறிய

நானும் முத்தையாப்பாவும் அவர்கள் வரும் திசையை நோக்கிய வண்ணம் இருந்தோம்.

பிள்ளைகள் எம்மை அண்மித்து விட்டார்கள்.

" என்ன பிள்ளைகள் நடந்தது. எல்லோருமாய் திரும்பி வருகிறீர்கள்.... ஏதும் புதினமே....முத்தையாப்பா ஆவலோடு கேட்டார்.

" ஓம் அப்பா.... கல்லூரி மாணவர்கள் சிலர் இயக்கத்தோடு சம்பந்தமானவை சொல்லி இன்னொரு இயக்கம் சுட்டதில் நாலைந்து மாணவர்களை பிணம், தெருத் தெருவாய் கிடக்குது. அதனால் பாடசாலைகள் மூடியாயிற்று. திரும்பி வருகிறோம்....

மாணவர்கள் சொல்லியவாறு நடந்து செல்கிறார்கள் அவர்கள் போனதும் என்பார்வை முத்தையா அப்பாவை பார்க்கிறது.

முத்தையாப்பாவின் கண்கள் நிலைகுத்தி நிற்கின்றன.

இமை விளிம்பில் நீர்த் திவலைகள்.

என்ன எதுவும் பேசாமல் இருக்கிறார். கண்கள் அசைவது கூட நின்றுவிட்டது... முத்தையாப்பாவுக்கு என்ன நடந்தது.

அப்பா.....அவரை உலுக்கினேன். அவரது உயிரற்ற உடல் குடையோடு நீட்டிச் சாய்ந்தது.

" முத்தையாப்பா...முத்தையாப்பா...." என் அழுகையின் அதிர்வுகள் கிராமத்தை அசைத்தது. முத்தையாப்பாவை

www.padippakam.com

தாக்கி அவரது வீட்டை கொண்டு சென்றுவிட்டார்கள். ...நான் இன்னும் மரத்தடியில்தான் இருக்கிறேன்.

முத்தையாப்பாவை கொன்றது எது?.

முத்தையாப்பா எனும் நீரில் பற்றிய நெருப்பா? தமிழர் படையில் விழுந்த நெருப்பா? காலம் சரித்திரம் எழுதுகிறது.

— அரிச்சந்திரன்

* திருமலை மக்கள் பிரதிநிதி ரத்தினவேலுவான ராஜா தேர்தலுக்கு முன்னர் சாந்த படையினரால் கைதாகி கொடூரமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டாராம். "மின்சார டிரீட்மென்ட்"டும் அளிக்கப்பட்டது. இதன் காரணமாக அவரது கால் விரல்கள் பாதிப்படைந்துள்ளன.

* சாவகச்சேரி பிரிவில் மிக மிக வேதனையான சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் உண்மைகள் அங்கு உறங்கிக் கொண்டிருக்கின்றன. தாய் குலத்துக்கு வார்த்தைகளால் வழங்க முடியாத வேதனைகள் ஏற்பட்டுள்ளது. சிலுவை சுமந்துள்ள மதத்தலைவர் சம்பவங்களைக் கண்டு கண்ணீர் மல்க ஆரம்பித்தாராம். மக்கள் பிரதிநிதி துயரங்களை கண்டவுடன் தம்மை அறியாமலே கண்ணீர் வடித்தாராம்.

* காரைநகரில் "செக்கிங்" நடந்ததாம். செக்கிங் முடிந்தவுடன் வீட்டில் இருந்த பொருட்களை காணவில்லையாம்! ஒரு வீட்டில் தண்ணீர் தாங்க என்று கேட்க வீட்டிலிருந்த பெண்மணி அடுப்பறைக்கு சென்று தண்ணீர் டம்ளருடன் வந்த போது கேட்டவரைக் காணவில்லையாம். மேசையில் இருந்த சிறுமியின் புத்தாடைப் பார்சலும் இல்லையாம். சில மணித்தியாலங்களுக்குப் பின்னர் அந்த ஆடை அடுத்த வீட்டு வளவில் அநாதையாக கிடந்ததாம்.

படிப்பகம்

# வசந்தம் வர வழியிருக்கு...!

பார்த்தேன் பார்வையை - யாழ்
பல்கலைக் கழகத்தில்
படித்தேன் அதன் பக்கங்களைத்
தவறாமல்....
அதிக பக்கங்களில் அரசியல்
தமிழ் ஈழ விடயங்கள்
விமர்சிக்கப் பட்டாலும்.....
அரசியல் நான் இங்கு அதிகம்
அலசவில்லை....
ஏனெனில் என்னதான்
எம் ஈழத்தில் எம்மண்ணில்
நடந்தாலும் நடக்குதேதான்
அதன் நட்டங்களும்
நமைச்சல்களும்.....
உங்கிருக்கும் உங்களுக்கல்ல...

'ஏப்ரல்' பார்வையில்
எழுதிய "வராத வசந்தங்கள்"
கவிதை தான் கடிதம் எழுத
எனக்கொரு எண்ணத்தை
எழுப்பியது....

- கோப்பாய் மாலதி -

[illegible] 'கவிதைக்கு' [illegible] பதில்...

www.padippakam.com

ஆமாம் ஆனந்தப் பிரசாத்
உங்களுக்குத்தான் அதை
உணர்த்துகின்றேன்.....
வசந்தங்கள் வரும் வரும்
என்று ஏதோ எதிர்பார்ப்பு....
உங்கள் உள்ளத்தில்....
ஊற்றெடுக்கும்....
ஆனால்......
எமக்கு எதிர்பார்ப்புக்களோ
எழுவதில்லை.....
ஏனெனில் நாம் நடமாடுவது
நம் ஈழத்தில்....
இன்றோ நாளையோ நம்
உயிர் பறிக்கப்படும் என்ற
பயம் உள்ள போது....
வராத வசந்தங்களையா
எம் உள்ளம்
எதிர்பார்த்துக் கிடக்கும்....

அரசியல் என்ற அரங்கினுள்
தலைவர்கள் தமக்குள்....
எதிரிக்கு எதிரி என் நண்பன்
என்ற நிலையில் வழி வகைகளை
வகுத்திட.....



படிப்பகம்

www.padippakam.com

அயல் நாடுகளில் அகதிகளாய்
அடைக்கலம் அடைந்தவர்கள்
அங்கு தமக்கு...
வசந்தங்கள் வரவில்லை என....
வராத வசந்தங்கள்
வராதா என
வருத்தமுறுகின்றனர்...
நாமோ.. ஒவ்வொரு நாளும்
படுக்கையில் பாய் போட்டதும்..
நாளைக்கு நாம் இருப்போமா...?
பாய் சுருட்ட எனப் பயந்தே
நம் காலத்தைக் கழிக்கின்றோம்....

பிரசுரத்திற்காகப் பிதற்றிய
கவிதைகளா?
அல்லது....
அவ்வளவும் உண்மையின்
நிகழ்வுகளா....?
எனக்குப் புரியவில்லை....

ஆனாலும் ஆனந்தப் பிரசாந்
உண்மை என்றால்
உங்களுக்கோர்...
உபாயம் உரைக்கின்றேன்



படிப்பகம்

www.padippakam.com

இனப் பிரச்சினையால்....
இங்கிருக்கும்.....
சீதனப் பிரச்சினையால்....
சீதாதேவிகள் பலர்
அடுக்களையில்....
அனல் காய்கின்றனர்.....
அவர்களில் ஒருவரை
அன்புடன் உங்கே
அழைத்தால்....
உங்களுக்கு வந்திடாதோ
வசந்தம்...!



படிப்பகம்

www.padippakam.com

செப்டெம்பர் 11ஆம் திகதி, மகாகவி பாரதியார் மரணமடைந்து 68-ஆவது ஆண்டு நினைவுதினம். அதையொட்டி அவரின் [illegible] கவிதைகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

## சுதந்திரப் பயிர்

தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ?
ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?
தர்மமே வெல்லுமெனும் சான்றோர்சொற் பொய்யாமோ?
கர்ம விளைவுகள்யாம கண்டதெலாம் போதாதோ?
மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?
எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?
மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து —
காதலிளைஞர் கருத்தழிதல் காணாயோ?
எந்தாய்! நீ தந்த இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ?
இன்பச் சுதந்திரம்நின் இன்னருளாற் பெற்றதன்றே?
அன்பற்ற மாக்கள் அதைப்பறித்தாற் காவாயோ?
வானமழை யில்லையென்றால் வாழ்வுண்டோ எந்தை சுயா
தீனமெமக் இல்லை யென்றால் தீனரெது செய்வோமே?
நெஞ்சகத்தே பொய்யின்றி நேர்ந்ததெலாம் நீ தருவாய்
வஞ்சகமோ எங்கள் மனத்தூய்மை காணாயோ?
பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்?
பொய்க்கோ தீராது புலம்பித் துடிப்பதுமே?
நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்,
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ?
இன்று புதிதாய் இரக்கின்றோமோ? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ?
நீயும் அறமும் நிலைத்திருத்தல் மெய்யானால்,
ஓயுமுனர் எங்களுக்கிவ் வோர்வரம் நீ நல்குதியே! □


படிப்பகம்

www.padippakam.com


# ஆனந்தறுசுவை
# உணவகம்

(இலங்கை இந்திய உணவுப் பண்டங்கள்)

- தோசை, இட்லி, இடியப்பம், பிட்டு, அப்பம், கொத்துரொட்டி, மற்றும் சைவ, அசைவ சாப்பாடுகள்.
- வடை, கட்லெட்ஸ், பற்றிஸ் இன்னும் பலப்பல
- வெள்ளிக் கிழமைகளில் பல பதார்த்தங்களோடும் வடை பாயாசத்துடனும் சைவச் சாப்பாடு கிடைக்கும்.
- சனிக்கிழமைகளில் அதிருசிமிக்க ஒடியல் கூழ் கிடைக்கும்.
- விஷேட வைபவங்களுக்கு வேண்டிய சகல உணவு வகைகளும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
- 20 டொலருக்கு மேல் கொள்வனவு செய்தால் இலவச விநியோகம் செய்யப்படும்.
- முன்கூட்டியே அறிவித்தல் கொடுத்தால் விஷேச கவனிப்பு உண்டு.

## ஆனந்தறுசுவை உணவகம்

7240 St. Hubert
Montreal
Metro JEAN TALON
கலோஷா கடைக்கு அருகாமையில்

தொலைபேசி
279-4042




படிப்பகம்

www.padippakam.com

## இதோ தமிழ் மனம் கவரும் இனிய ஸ்தாபனம்



# மாசே ரிங்கோ

- உங்களுக்குத் தேவையான
- சகலவிதமான அன்றாட பாவனைப் பொருட்கள்.
- இலங்கை இந்திய கனடிய உணவுப் பொருட்கள்
- கோவில், சமயப் பண்டிகைகள், திருமணம் மற்றும் முக்கிய நிகழ்ச்சி எதுவானாலும் வேண்டிய மங்களப் பொருட்கள்
- ஒலிப் பதிவு நாடாக்கள், இசைத் தட்டுக்கள்

## அனைத்திற்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.



# MARCHE TRINCO

7103 Drolet, Montreal
Canada • H2S 1TA

Tel: 271-4077



© 1989 RP

www.padippakam.com

# என்று வருமோ விடிவு....?

என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று
அன்று பாடினர் பாவேந்தன் பாரதி

என்று மலரும் எங்கள் சுதந்திர ஈழம் என்று
இன்றும் ஏங்குகிறேன் எந்தன் மனதிலே

எண்பத்து மூன்றிலே தொடங்கிய இரத்த வெள்ளம்
இருபது ஆண்டு சென்றும் ஓயவில்லை ஏன்தானோ
ஏன் இந்த அவலநிலை ஈழத் தமிழருக்கு,

வாராதோ ஓர் முடிவு நயவஞ்சக நரிகளிந்து,
அன்றிலிருந்து இன்றுவரை அடிமைகளாய் வாடுகின்றோம்
வேறு வழி எமக்கில்லை இறைவனையே நம்புகின்றோம்

நன்றி கெட்டு நாட்டை விற்கும் நாய்கள் இருக்கும் வரை,
தம் இனத்தையே காட்டிக் கொடுக்கும் ஈனர்கள் இருக்கும்வரை
என்று வரும் ஓர் விடிவு
இறைவா நீ சொல்லாயோ?.



படிப்பகம்

www.padippakam.com

# கனடாவிலிருந்து ஓர் கடிதம்

அன்புள்ள நந்தினிக்கு
ஆனந்தன் எழுதுவது,

இங்கே நான் நலம்
உன் நலம் எப்படியோ?

அன்றே நான் உன்னை
காதலித்தது உண்மைதான்— ஆனால்

உனக்கு ஓர் விடயம்
இயம்ப வேண்டும் பைங்கிளியே

எனக்கு ஓர் கடிதம்
எழுதினார் என் அப்பா,

வீடு , வாசல், வட்சம் என்று
என்னை விற்பதாக ஒருவருக்கு
வாக்கும் கொடுத்து விட்டார்.

வரதட்சணையும் வாங்கி விட்டார்

என் இனியவளே என்றும்
நீ எனக்கு இனியவளே.

என்னை மன்னித்து, மறந்துவிட்டு
பதில் ஒன்று போட்டு விடு.

ஜான்ஸி விஜயகுமார்



படிப்பகம்

www.padippakam.com

*With the best Compliments from*

# கணேசா
# GANESHA

7244 St. HUBERT
TEL: **273-3589**



படிப்பகம்

www.padippakam.com

விளம்பரமின்றி
வியாபாரமில்லை

# தமிழ்த்தென்றல்

வியாபாரமின்றி
விளம்பரமில்லை

மொன்றியால் தமிழ் நேயர்களுக்காக
பல வருடங்களாக மொன்றியால் CFMP1410
அலை வரிசையில் ஒலிபரப்பிவரும்
தமிழ்த்தென்றல் இனிய பாடல்கள்,
உலகச்செய்திகள், இலக்கிய விருந்து
போன்ற பல சுவையான அம்சங்களுடன்
காற்றில் மிதந்து வருகின்றது.
உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள்
விழாக்களை அறியத்தரவும்,
வியாபார ஸ்தலங்களை விளம்பரப்படுத்தவும்,
தமிழ்த்தென்றல் உங்களோடு இணைகின்றது.
நிகழ்ச்சியின் விமர்சனங்களை தென்றல்
எதிர்பார்க்கின்றது.









www.padippakam.com

# MADINA SUPER MARKET

# மதீனா சூப்பர்மாக்கெற்

17, ONTARIO ST. EAST, (NEAR ST. LAWRENT BLVD)
TEL: 849-0549 / 849-0009



- பல வருடங்களாக இலங்கை இந்திய மக்களின் மனம் கவர்ந்த ஸ்தாபனம்
- இலங்கை, இந்திய கனடிய உணவுப் பொருட்கள் வரிசையில் முதலிடம்
- புதிய பழைய திரைப்பட வீடியோ கசெட், இசை நாடாக்கள்
- மொன்றியல் நகர மத்தியில் சென்லோறன்ஸ் மெற்றோவுக்கு மிக அண்மையில்

மதீனா சூப்பர்மாக்கெற்

படிப்பகம்



# பிறந்தநாள் வாழ்த்து!

தேவநாதன் செல்வராணி
தம்பதிகளின் செல்வ புதல்வர்களான

## கௌசிகன் - திவாகரன்

19.5.89 அன்று தங்கள் மூன்றாவது
பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

இலங்கை காங்கேசன்துறை
அப்பப்பா, அம்மம்மா, அத்தைமார்
மாமாமார், மானிப்பாய் அப்பப்பா
அம்மம்மா, சித்தி சித்தப்பா ஜேம்ஸ்மாமா
மச்சான்மார் சித்தப்பா லோகன்டோ சித்தப்பா
மற்றும் உற்றார் உறவினர்கள் இலங்கை

**பல்லாண்டு வாழ்க!**
என வாழ்த்துகின்றனர்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




# முகேஷ் ஜுவலர்ஸ்

தரம்மிகுந்த
இந்திய தங்க நகைக
ளுக்கும், நங்கையர்
நாடும் நவநாகரீக
தங்க - வைர - வெள்ளி
ஆபரணங்களுக்கும்

நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்

உங்கள் தேவைக்கேற்ப ஆபரணங்களை
அடிப்படைத் தயாரிப்பதற்கும் - புனரமைப்பதற்கும்
- இன்றே நாடுங்கள் -

620, கர்காட் வீதி
அறை 320
தொலைபேசி
861 3110

MUKESH
JEWELLER
620, Cathcart St., Suite 320
Tel : 861-3110


படிப்பகம்